★ நாடு பிரிந்தால்தான் நல்வாழ்வுண்டு ★

Phone No 4502 | Regd. No. M. 5458

விலை அரை அணா | இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (27—6—50) | வெளியூர் (28—6—50) | இதழ் 289

மக்கள் ஒலிபெருக்கிகளாகமாறி கொள்கையினை பரப்பவேண்டும்

—(0)—

காங்கிரஸ்காரர் ஊழல்களாலேயே காங்கிரஸ் கரைகிறது

—(0)—

முன்னேற்ற நாடகங்களை தடைசெய்தால் சிறை செல்லவும் தயார்

—(:0:)—

மாதரை இழிவுசெய்யும் இந்து மதம் அழியவேண்டும்

ஆரணி மாநாட்டில் தோழர்கள் முழக்கம்

நாடு பிரிந்தால்தான் நாம் வாழ முடியும். இதற்கு ஆவனசெய்ய மக்கள், ஒலி பெருக்கிகளாகமாறி கொள்கையினைப் பரப்பவேண்டும்

இரா. நெடுஞ்செழியன்

காங்கிரஸ் கரைய ஆரம்பித்துவிட்டது. காரணம், தி. மு. க. பிரசாரமல்ல; மாற்றுக்கட்சியாளரின் பேச்சுமல்ல; காங்கிரஸ்காரரின் ஊழலே காங்கிரசைக் கரையச்செய்கிறது

ப. உ. சண்முகம்

ஜனநாயகம் ஒடுங்க, ஒடுங்க, புரட்சித் தீ வளரத்தான் செய்யும். இது சரித்திரம்.

சி. பி. சிற்றரசு

நம் கழகத் தோழர்கள் எழுதிய சீர்திருத்த நாடகங்களை அரசாங்கம் தடைசெய்வதை எதிர்த்து சிறை செல்லவும் தயார்.

டி. வி. நாராயணசாமி

என்னைப்போன்ற பெண்களை இழிவு செய்யும் இந்து மதம் ஒழியவேண்டும். அதற்காகவே நான் பணிபுரிகிறேன்

இராமாமிர்தத்தம்மையார்

ஆரணி, ஜூன் 24—

வ. ஆ. ஆரணி திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டு, முதல் நாள் பிற்பகல் நிகழ்ச்சி, மீண்டும் 3 மணிக்கு தோழர் க. அன்பழகன் தலைமையில் துவங்கிற்று.

ப. உ. சண்முகம்

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் ஒரு மணிநேரம் ஆற்றிய அறிவுரையின் சுருக்கம் வருமாறு:—

"நாம் திராவிட நாட்டுப் பிரிவினையை, பாகிஸ்தான் பிரச்னை கிளம்பாத முன்பு இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு கிளப்பினோம். ஆனால் இன்றுவரையில் அது, 'குறுகிய மனப்பான்மை' என்று ஆளவந்தார்களால், மறுக்கப்பட்டு வருகிறது. காரணம், நாம் பிரிந்தால், இங்கு ஓர் நவகாளி யத்தம், கிழக்குபாகிஸ்தான் ஏற்படும் என்கிறார்கள். நான் கேட்கிறேன், திராவிடத்தைவிட குறுகிய நில பரப்புள்ள பர்மா, பிரிந்த போது ஏன் அங்கில்லை ஏற்படவில்லை? பாகிஸ்தான் மதத்தின் அடிப்படையாகக் கொண்டே கேட்கப்பட்டது. ஆனால், நாம் கலாசாரத்தின் அடிப்படையாகக்கொண்டு கேட்கிறோம். மதம் நாட்டாற போன்றது. உதாரணமாக புத்தமதம், இந்தியாவிலே தோன்றி சிலோன், பர்மா இங்கிலாந்து போன்ற நாடுகளில் பரவியது. ஆனால் கலாசாரம் அப்படிப்பட்டதல்ல. ஆகவே, நாம் கலாசாரத்தினைக் காட்டி நாட்டுப் பிரிவினையை நாடி நிற்கிறோம்

காங்கிரஸ் தோழர்கள் எந்த அடிப்படையைக் காட்டி, எந்த விடுதலை வேட்கையை, உரிமையைக் காட்டி 'வெள்ளையனே வெளியேறு' என்றனரோ அதே அடிப்படையில் நாங்கள் 'வடவனே வெளியேறு' என்கிறோம். காரணம் அவர்கள் நம்மைச் சுரண்டி வாழ்கிறார்கள். நம்மை அவர்கள் சுரண்டுகிறார்கள் என்று நான் மட்டும் கூறவில்லை, இத்துவே தக்க பக்கம் [illegible] ஜாவா சர்க்கரை 5 அணாவுக்குக் கிடைக்கும்போது அதை [illegible] வடநாட்டு யு. பி.யில் கிடைக்கும் சர்க்கரையை ஒரு ரூபாய்க்கு விற்பதன் அர்த்தமென்ன என்று?

சிறைச்சாலை மந்திரி, மாதவமேனனை கல்வி அமைச்சராக மாற்றியதால், சிறைச்சாலையில் கைதிகளை நடத்துவதைப் போல் மாணவர்களையும் நடத்துகிறார். இக்கொடுமை ஒழியவேண்டும். இந்தியைக் கொண்டு, நம் சொந்தமொழியினை அழிக்கிறார், தமிழ் அழிந்தால், இந்தி கட்டாயபாடமானால், நம் இன உணர்ச்சி அழியும் காங்கிரஸ் கரைய ஆரம்பித்து நாற்றமெடுக்கத் தொடங்கிவிட்டது. காரணம், தி. மு. க. பிரசாரமல்ல, மாற்றுக்கட்சியாளரின் பேச்சல்ல அல்ல, காங்கிரஸ்காரர்களின் ஊழலே காங்கிரசை அழிக்கிறது..

வரவேற்பு

மாநாட்டுத்தலைவர் தோழர் க. அன்பழகன் அவர்கள் [illegible] ஆரணி உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சார்பிலும் சார்பி[illegible]

ஐ. நா-வில் செஞ்சீனா இடம் பெறுமா?

ஆட்லி அறிக்கை வெளியிடுவாராம்

லண்டன், ஜூன் 26—

ஐ. நா ஸ்தாபன விஷயமாக பிரிட்டிஷ் கொள்கையை விளக்கி ஒரு முக்கியமான அறிவிப்பை பிரிட்டிஷ் பிரதம மந்திரி தோழர் ஆட்லி கில்ட் ஹாலில் ஐ. நா. சங்கக் கூட்டத்தில் பேசுகையில் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

அநேகமாக இந்த அறிவிப்பு ஐ. நா-வில் செஞ்சீனா சேருவதை பிரிட்டன் ஆதரிக்குமா என்பதைப்பற்றியிருக்கும். இப்பொழுது இவ்விஷயமாக பிரிட்டன் வோட்டில் கலந்துகொள்ளாமல் இருந்து வருகிறது.

இந்த கில்ட் ஹால் கூட்டத்தில் தோழர் ஈடன் டாக்டர் கில்பர்ட்முர்ரே ஐ. நா காரியதரிசி டிரிக்வெல்லே ஆகியோரும் பேசவிருக்கிறார்கள்.

தோழர் டிரிக்வெல்லே ஐ. நா. காரியதரிசி பதவியை ஏற்ற பின் பிரிட்டனில் அவர் பேசப்போவது இதுவே முதல் தடவை. ஐ. நா வைப் பலப்படுவதற்கான தன் 10 அம்ச யோசனைகளை அவர் விளக்குவார்.

கிராமத்தை யூதர்கள் தாக்கினர்

அம்மான், ஜூன் 26—

ஜெருசலத்திற்கு தெற்கிலுள்ள [illegible] என்ற கிராமத்தை யூதர்கள் தாக்கி வீடுகளை தகர்த்து விட்டதாகத் தெரியவருகிறது.

யூதர்களின் நாசவேலை

அம்மான், ஜூன் 26—

[illegible] என்ற கிராமத்தில் யூதர்கள் [illegible] இன்னும் இருந்த [illegible] எல்லாம் எரித்து அழித்து வருகின்றனர் என்றும் ரமல்லா பிரதேசத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது

கம்யூனிஸ்டுகள் தேர்தலுக்கு தயாராகின்றனர்

லண்டன், ஜூன் 26—

கம்யூனிஸ்டுகள் ஆதிக்கம் பெற்ற சோஷலிஸ்ட் ஐக்கிய கட்சி தேர்தலுக்கு தயாராகி வருகின்றனர்.

தோழர் விஷின்ஸ்கி எங்கே?

ரஷ்ய அயல்நாட்டு மந்திரியைப்பற்றி லண்டன் வட்டாரத்தில் கலக்கம்!

லண்டன், ஜூன் 26—

ஐ. நா. காரியதரிசி தோழர் டிரிக்வெல்லேயை சந்தித்துப் பேசிய ரஷ்ய அயல்நாட்டு மந்திரி தோழர் விஷின்ஸ்கியைப் பற்றி அதற்கு பின் எவ்வித தகவலையும் காணோம்.

ரஷ்யப் பத்திரிகைகளிலும் மாஸ்கோ ரேடியோவிலும் மே 18-ந் தேதி முதல் அவரைப்பற்றி எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை. அவர் தலைமை வகிக்க வேண்டிய வைபவங்களுக்கெல்லாம் கிரிபோமிகோதான் கலந்து கொண்டுவருகிறார்.

இம்மாதிரி திடீரென்று விஷின்ஸ்கியைப்பற்றி தகவல் இல்லாமல் இருப்பது பல ஐயப்பாடுகளை கிளப்பிவிட்டிருக்கிறது.

அவர் அசௌக்யமுற்றிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர் அவர் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டிருக்கலாம் என்கின்றனர்.

அவர் சீனாவுக்கோ அல்லது ரஷ்யாவுக்கு சிரத்தையுள்ள வேறு இடத்திற்கோ ஒரு முக்கியமான வேலையைச் செய்ய அனுப்பப்பட்டிருக்கலாம் என்றும் சில வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

கலகத்திற்குக் காரணம் போலீஸ் அட்டூழியமே

(:—:)

தெ. ஆ. விசாரணைக் கமிஷன் கருத்து

லண்டன் ஜூன் 26—

தென்னாப்பிரிக்காவில் [illegible]ராண்ட் என்ற இடத்தில் ஆப்பிரிக்க சுதேசிகள் கலகம்செய்ததற்குள்ள காரணங்களில் ஒன்று அன்றாட சட்ட திட்டங்களை அமுல் நடத்துவதால் போலீசார் கடுமையாக நடந்துகொண்டதே காரணம் என்று இக்கலகம்பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட கமிஷன் தன் ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறது

மற்றொரு காரணம் கம்யூனிஸ்டுகள் இவர்களை தூண்டிவிட்டு செய்த பிரசாரமாகும் என்றும் அக்கமிஷன் அபிப்பிராயப்படுகிறது

ஆஸ்திரேலியாவில் புயல் கொடுமை

சிட்னி, ஜூன் 26—

ஆஸ்திரேலியாவின் பல பாகங்களில் புயல் ஏற்பட்டு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

குவீன்ஸ்லாந்தில் ஏற்பட்டுள்ள [illegible] நஷ்டத்திற்கு கணக்கு சொல்ல முடியாது என கூறப்படுகிறது.

பிரிஸ்பேன் முதல் [illegible] வரையில் உள்ள [illegible] ஓரத்தில் [illegible] வீடிழக்கும்படி செய்திருக்கிறது.

சில இடங்களில் இரண்டு மணி நேரத்தில் 8 அங்குல மழை பெய்திருக்கிறது.

கல்வி கற்கவும் வசதியில்லை

நெட்டாலில் இந்தியர் நிலை

டர்பன், ஜூன் 2[illegible]

தென்னாப்பிரிக்காவில் நேட்டால் மாகாணத்தில் மட்டும் 30,00[illegible] [illegible] குழந்தைகள் கல்வி [illegible] பெறமுடியாத நிலைமையிலிருக்கின்றனர்.

கல்வி கற்றுக்கொடுக்க உபாத்தியாயர்கள் [illegible] இதற்கு காரணம் என்று [illegible] அட்மினிஸ்டிரேட்ட[illegible]

இந்நாட்டின் [illegible] [illegible] பெற்றதன்னிலை [illegible] மிகவும் ஒரு [illegible] படுகிறது. [illegible] [illegible]த்தின் மூலம் [illegible] [illegible] இந்தியர் [illegible] [illegible] அவர் கருத்[illegible]

மாலை மணி

சென்னை 27—6—50 செவ்வாய்க்கிழமை

மரம் நடும் விழா!

கொரியாவில் போர்; வட கொரியாவின் படைகள் தென் கொரியாவைப் பலமாகத் தாக்கி வருகின்றன; படையெடுப்பைச் சமாளிக்க முடியாமல், தென் கொரியா திகைக்கிறது. அமெரிக்காவின் உதவியைத் தேடி அலைகிறது; ஐ. நா. சபையிலே பரபரப்பு; மேலைநாட்டு வல்லரசுகளிடையே கலக்கம். கொரியாவில் மூண்டுள்ள போர், மூன்றாவது உலகப் போருக்கு வித்தாகி விடுமோ என்ற அச்சமும் ஐயமும், அகில உலக அரசியல்வாதிகளின் மண்டையைக் குடைய ஆரம்பித்திருக்கிறது.

• • •

தென்னாப்பிரிக்காவிலே, நிற வெறி உச்சநிலை அடைந்து வருகிறது. இந்தியரையும், தென்னாப்பிரிக்கப் பழங்குடி மக்களையும் இழிவு செய்யும் இன வட்டார மசோதா, சட்டப் புத்தகத்திலே இடம் பெற்று விட்டது. இது கண்டு, பழங்குடி மக்கள் உள்ளம் உலைக்களமாக மாறிவிட்டது; அவர்களுடைய வெறுப்பு கோபமாகவும், கோபம் புரட்சியாகவும் வளர்ந்து வருகிறது; தொழிலாளர் துக்க நாள் கொண்டாடுகின்றனர்; வர்த்தகர்கள் கடையடைப்பு செய்வதன் மூலம், தமது வெறுப்பை வெளிக்காட்டுகின்றனர். இங்ஙனம், வெந்த உள்ளத்தினராகக் காட்சியளிக்கும் மக்கள்மீது, வெள்ளை வெறியர்கள் அடக்குமுறை அம்புகளை வீசி வருகின்றனர்.

* * *

அடுத்தவாரம் முதல் அரிசிப் பங்கீட்டின் அளவு 8 அவுன்ஸிலிருந்து, 7 அவுன்ஸாகப் போகிறது. இது குறித்து ஏழைமக்களின் உள்ளத்தில் ஏக்கம் குடிகொள்ள ஆரம்பித்து விட்டது.

* * *

இவை, இன்றைய உலக [illegible] சித்தரிக்கும் [illegible] அல்ல ஒரு சில முக்கிய [illegible]ச்சிகளாகும். இங்ஙனம், [illegible]ங்கெங்கும் கொந்தளிப்பு [illegible]ன்றிவரும் வேளையிலே [illegible]ன், இவ் இந்திய உபகண்ட [illegible]யாளர் நாடெங்கும் [illegible]ம் நடும் விழா' என்னும் [illegible]த்திர விழாக் கொண்டாட [illegible]ரம்பித்துள்ளனர்.

ஜூலை முதல் தேதியன்று இவ் [illegible] ஆரம்பமாம்! இந்திய குடியரசுத் தலைவர் தோழர் இராஜேந்திரபிரசாத் அவர் [illegible]ளே இவ் விழாவினைத் [illegible]க்கிவைக்கிறார்.

[illegible]ல் உணவுப் பஞ்சம் [illegible] பயமுறுத்திக்கொண் [illegible] அரிசியின் அளவு [illegible] ஒரு புறம்; விலை [illegible]றேர் புறமுமாகத் [illegible] ஏழை மக்களை இரு [illegible]க்குதலுக்குள்ளாக்கி [illegible] வேலையில்லாத் [illegible]ம் விஷமெனப் [illegible]கிறது. உழவர் படும் [illegible] சொல்லித்தர

மன்று; தொழிலாளர் அதுபரம் அளவு கந்து செல்கிறது. உழைப்புக்கேற்ற ஊதியம் அவர்கட்குக் கிடைப்பதில்லை. நாட்டு மக்களுக்குப் போதிய கல்வி வசதி கிட்டவில்லை. ஆண்டுதோறும் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இடமின்றித் திரும்புகின்றனர் மாணவர்கள்.

இப்படிப்பட்ட அலங்கோல நிலையை மாற்றியமைப்பதில், ஆட்சியாளருக்கு நாட்டமில்லை. மக்களை மக்களாக வாழச் செய்யும் வழிகளைக் காணும் திறமில்லை—திட்டமில்லை ஆட்சியாளரிடம் இந்நிலையிலேதான், மரம் வளர்க்கும் மாபெரும் பணியிலே ஈடுபட்டுள்ளனர் மகாத்மாவின் சீடர்கள்!

மக்கள் வளர வழியில்லை; மரம் வளர வழிவகுக்கப்படுகிறது! இதற்கு ஒரு விழா! இதில் அமைச்சர்கள் வனேற்ற அக்கரை காட்டுகின்றனர்.

'குறிப்பறிய மாட்டாதவன் நன்மரம்' என்பது முதுமொழி. நாம் மேலே சுட்டிக்காட்டியிருக்கும் இன்றைய நாட்டுமக்களின் நிலையை—குறிப்பறியும் ஆற்றலை, இந்நாட்டு அமைச்சர்களிடம் காணமுடியவில்லை. மந்திரிகள் மரங்களாகின்றனர்! எனவேதான், நாட்டிலே எத்தனையோ இன்றியமையாப் பணிகளிருக்க, மரம் நடும் பணியில் நாட்டம் செலுத்துகின்றனர் போலும்!

நாட்டைப் பஞ்சம் பயமுறுத்தும் இவ்வேளையில், பயிர் வளர்க்கும் விழாக் கொண்டாட வேண்டியவர்கள் மரம் வளர்க்கின்றனர்! காரணம் கேட்டால், மரங்களின் மகத்துவம் பற்றிப் பேசுகின்றனர். என்னே விந்தை!

இன்று, இவர்கள் நடும் செடிகள், மரங்களாகும் காலத்திற்குள், உலகம் என்னென்ன மாறுதல்களைக் காணப்போகின்றனவோ, விஞ்ஞானம் எந்த அளவுக்கு முன்னேறப் போகிறதோ தெரியவில்லை. இந்நிலையிலே, இன்றையப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் கொள்ளாத ஆட்சியாளரின் போக்கை என்னென்பது?

கழகத் தோழர்களே! கிளைக் கழகங்களே!

-•- கட்டிட நிதிக்கு -•-

தேவை ரூ. 10,000

கிடைத்திருப்பது 3,000

இடைவெளியை காணிக்கையால் இணையுங்கள்

வன இயல் கல்லூரி பட்டமளிப்பு விழா

—·——(0)——

கல்லூரித் தலைவர் ஆண்டு அறிக்கை

கோயமுத்தூர். ஜூன் 25—

மே. த. சென்னை கவர்னரின் தலைமையில் இன்று, இங்கு நடைபெற்ற சென்னை வன இயல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில், கல்லூரியின் பிரின்ஸிபால் மி. [illegible] ஐ. எப். எஸ். 1949-50க்கான ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார். அவ்வறிக்கையின் சுருக்கமாவது:—

சென்னை வன இயல் கல்லூரி, சென்னை மாகாணத்துக்கு வேண்டிய வன ரேஞ்சர்களைப் பயிலுவிக்கும் பொருட்டு, சென்னை சர்க்கார் 1912-ல் கோயமுத்தூரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிற்பாடு, இந்திய சர்க்காருடன் செய்துகொள்ளப்பட்டதொரு ஏற்பாட்டிற்கிணங்க, பம்பாய், மத்ய மாகாணம், பீஹார், ஒரிஸ்ஸா ஆகிய சர்க்காரகளும் தங்கள் மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களையும் வன ரேஞ்சர் பயிற்சிக்காக, இந்தக் கல்லூரிக்கு அனுப்பி வந்தனர். இந்தியாவின் பிற பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு டேராடூன் கல்லூரியில் பயிற்சியளிப்பதென்றும், அப்பொழுது ஏற்பாடாகியிருந்தது. கோயமுத்தூர் கல்லூரி மாகாண சர்க்காரால் நடத்தப்பட்டு வந்தபோதிலும், எல்லா விஷயங்களிலும் டேராடூன் கல்லூரியைப் பின்பற்றியே தொழில்பட்டு வந்தது. ஆனால், டேராடூன் கல்லூரியின் நிர்வாகச் செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கையில், கோயமுத்தூர் கல்லூரியின் நிர்வாகச் செலவை சென்னை சர்க்காரே கொடுத்துவந்தனர்.

கல்லூரியில் சென்னை மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்ததால், அந்நிலைமையில் கல்லூரியைத் தொடர்ந்து நடத்துவது லாபகரமாயிருக்காதென்று கருதப்பட்டு, 1939 ஜூலை முதல் தேதியன்று கல்லூரி மூடப்பட்டுவிட்டது. காட்டிலாகா உத்தியோகங்களுக்குப் புதிதாக ஆட்கள் எடுப்பது நிறுத்தப்பட்டது காரணமாக, டேராடூன் கல்லூரியும் 1933-ல் மூடப்பட்டு விட்டது.

பிறகு, 1947-ல், காடுகள் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், டேராடூன் வனத்துறை ஆராய்ச்சிக் கழகத் தலைவரும் கூடிய யோசனைக்கிணங்க இந்திய சர்க்கார் இந்தக் கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்த சென்னை சர்க்காருடன் பேச்சு வார்த்தை ஆரம்பித்தனர். காடுகள் நிர்வாகம் மாகாண சர்க்கார்களின் அதிகாரத்துக்குட்பட்ட விஷயமாயிருந்த போதிலும், காடுகள் பாதுகாப்பு கொள்கையை வகுப்பது மத்திய சர்க்காரின் பொறுப்பாகவே இருக்கவேண்டுமென்றும், எல்லா மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் ஒரே மாதிரியான கொள்கைகள் அனுசரிக்கப்படும்படி செய்வதற்கு காட்டியல் கல்வி போதனை மத்திய சர்க்காரின் மேற்பார்வையிலேயே நடைபெறவேண்டியதும் அவசியமென்றும், இந்திய சர்க்கார் கருதினர். இக்கொள்கையை யொட்டியே, சென்னை வன இயல் கல்லூரியின் நிர்வாகத்தை 1948 ஜூலை முதல் தேதியிலிருந்து, பரீட்சார்த்தமாக நான்கு ஆண்டுகளுக்கு மத்திய சர்க்காரே எடுத்துக் கொண்டனர்.

இக் கல்லூரியின் சரித்திரத்தில் இந்த ஆண்டு மிக முக்கியமானதொரு முன்னேற்றத்தைக் குறிப்பதாகும். இக்[illegible] இரண்டு ஆறு வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தன. மொத்தம் 174 மாணவர்கள் பயிற்சி பெற்று வந்தனர். கல்லூரி மத்திய சர்க்காரின் நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டு விட்டதென்ற காரணத்தால், சென்னை சர்க்காரின் காட்டிலாகா அதிகாரிகளின் ஆதரவும் பரிவும் சிறிதும் குறைந்து விடவில்லையென்றும், கல்லூரி மாணவர்களின் சுற்றுப்பிரயாணங்கள் வெற்றிகரமாக நடைபெற இவர்கள் ஒவ்வொருவரும் அதிக உற்சாகத்துடன் உதவிபுரிந்து வருகின்றனர் என்றும் மி. ஏ. [illegible] கூறினர்.

கல்கத்தாவில் கனத்த மழை

கல்கத்தா, ஜூன். 24—

முதன் முதலாக மிக கனத்த பருவகால மழையை, இன்று கல்கத்தா கண்டது. கடந்த 24 மணி நேரத்தில், 2.35 அங்குல மழை பெய்துள்ளது.

சுமார் 12 மணிநேரம் இடைவிடாது மழை பெய்து கொண்டே இருந்தது. நகரில் பள்ளமாக உள்ள பகுதிகளெல்லாம் ஒரே தண்ணீராக இருந்தது. சில பகுதிகளில் போக்குவரத்துகள் அநேக மணிநேரம் தடைபட்டுக்கிடந்தன. ஆபீஸ் செல்பவர்களுக்கு இதனால் இடையூறு ஏற்பட்டது.

வடகல்கத்தாவிலுள்ள தான் தானியா என்னுமிடத்தில் அநேக டஸ்களும், டிராம்களும் முழங்கால் மட்டும் தண்ணீரில் நகரமுடியாது நின்றுபோயிருந்தன. வீடுகள் எதற்கும் சேதம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. டெலிபோன் போக்குவரத்து ஓரளவுக்குத் தடைபட்டனவாம்.

தொழிலாளருக்கு வீடு வசதி

ஹைதராபாத் சர்க்காரின் 50,000 தொழிலாளருக்கு வீடு வசதி அளிப்பதற்காக 10 வருட திட்டமொன்றை ஹைதராபாத் சர்க்கார் பரிசீலனைசெய்து வருவதாக தெரிகிறது.

தென் கொரியாமீது வடகொரியா படையெடுப்பு

நேசநாடுகளிடையே பரபரப்பு

லண்டன் ஜூன் 26—

தென் கொரியா மீது வட கொரியா யுத்தம் தொடுத்திருப்பது குறித்து நேச நாடுகளின் தலைநகர்களில் மும்முரமாக மந்திராலோசனை நடைபெற்றுவருவதாகத் தெரியவருகிறது.

வாஷிங்டனில் அரசாங்க அமைச்சர் தோழர் டீன் அசிஸான் கொரியா நெருக்கடி விஷயமாக தன் முக்கிய ஆலோசகர்[illegible]டன் கலந்தாலோசித்த[illegible] செய்தி கிடைத்திருக்[illegible].

[illegible]ட்டனில் அயல்காட்டிலாகா தென் கொரியாவிலுள்ள தன் ஸ்தானீகரிடமிருந்து முழு ரிப்போர்ட்டை எதிர்பார்த்திருக்கிறது.

லண்டனிலுள்ள தென்னிந்திய கொரிய ஸ்தானீகர் டிசிசிங் அயல்நாட்டிலாகாவில் கீழ்க்கோடி இலாகா தலைவர் ராபர்ட்ஸ்காட்டை கண்டு பேசினர்.

கொரியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை உத்தேசித்தாவது பிரெஞ்சு தலைவர்கள் ஐக்யப்பட்டு புது மந்திரி சபையை சீக்கிரம் அமைக்க வேண்டும் என்று பிரெஞ்சு பிரசிடெண்ட் தோழர் வின்செண்ட் அரியோல் ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

புது அரையணா கார்டு

புதுடில்லி, ஜூன் 25—

அரையணா ஸ்டாம்புடன் புதியஸ்தல (லோகல்) தபால் கார்டுகள் ஜூலை 1-ந்தேதி முதல் விற்கப்படும். இந்தத் தேதி முதல் [illegible]ற்று காடுக்காக இதுகாறு[illegible]க்கப்பட்டு வந்த கட்டண[illegible] வசூலிக்கப்படமாட்டாது.

நாடு பிரிந்தால்தான்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பனுப் பேட்டை வாசிகள் சார்பிலும், மாலைகள் அணிவிக்கப்பட்டு, வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன. கவிஞர் அவர்கள் நன்றிகூற அடுத்துத்தோழர் வி. முனுசாமி பேசினர்.

வி. முனுசாமி

சென்னைத் தோழர் வி. முனுசாமி அவர்கள், பேசும் போது ஜனநாயக அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு இன்றைய காங்கிரஸ் ஆட்சி வீசும் அடக்குமுறை ஊயும், உரிகளையும், அதன் பிற்போக்குத் தன்மையினையும் கண்டித்துப் பேசினர்.

டி. வி. நாராயணசாமி

தோழர் ம. வி. நாராயணசாமி அவர்கள் 'நாடகக்கலை' என்பதுபற்றிப் பேசும் போது குறிப்பிட்டதாவது:—

'நாடகக்கலை, நாடுபுராணத்தால் மூடப்பட்டிருக்கபோது நாடகங்களும், புராணங்களில் மூழ்கியிருந்தன. ஆனால், அந்த மாசு அண்ணாதுரை அண்ணசகாட்டத்தாலேயே மாற்றப்பட்டது. சமூகத்திலே சமுதாயத்தை ஒட்டிய சீர்திருத்த நாடகங்கள் தேவை என்று தோழர் அண்ணாத்துரை கூறியபோது பல முதலாளிகள் மறுத்தனர். மக்கள் வரவேற்க வேண்டாமா அவைகளை என்று விதண்டாவாதம் புரிந்தனர். பிறகு தோழர் அண்ணாத்துரை அவர்களும், நானும் 'சந்திரோதயம்' போன்ற நாடகத்தை நாடு முழுவதும் நடித்தோமே—சிறிலே, தோழர் கே. ஆர். ராமசாமியால், 'வேலைக்காரி' 'ஓர் இரவு' போன்ற நாடகங்கள் ஆறுமாத காலம் தொடர்ந்து ஓட, எந்தப் புராண நாடகமும் பெறாத வெற்றியினைப் பெற்றது. ஆகவே நாடகத்தினை, திருத்தியமைத்து, அதனை வளர்த்தவர் அறிஞர் அண்ணாத்துரைதான் என்றால் அது மிகையாகாது. மேலும் கவிஞர் பாரதிதாசன், அண்ணாத்துரை போன்ற நம் சமூகத் தோழர்கள் எழுதிய நாடகங்களை இன்றைய அரசாங்கம் தடை விதித்து தடுக்கிறது. இது நீதியாகாது. இக்கொடுமையினை எதிர்த்து சிறை செல்ல நான் தயார் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

இராமாமிர்தத்தம்மையார்

"அன்புமிக்க தலைவர் அவர்களே! தமிழ் மக்களே! தோழியர்களே! என்னை பாட்டியென்றும், வயதாகி விட்டவளென்றும் தலைவர் கூறினர். உண்மையில் நான், வயதிலே வேண்டுமானால், மூதாட்டியாக, எழுபத்தைந்து ஆண்டு நிறைந்தவளாக இருப்பேனே தவிர, என் உள்ளம் சுயமரியாதைக் கருத்துக்களில் இளம்பெண், இருபத்தைந்து கூட நிரம்பியதல்ல. இவ்வளவு வயதான கிழவி, சாகும்போது 'சங்கரா! சங்கரா!' என்று இல்லாமல், ஏன் இப்படி 'கடவுள்' இல்லா கட்சியில் இருக்கிறது என்று நீங்கள் நினைக்கலாம். என்னை இழிவு படுத்தி இகழ்ச்சி செய்யும், இந்துமதம் அழிகிறவரையில் நான் சாகமாட்டேன். என்னை மட்டுமல்ல, உங்களையும் அது இழிவு படுத்துகிறது. அதை தொலைக்க வேண்டும்; ஆகவே தான் நான் தி. மு. க. வில் சேர்ந்து பணியாற்றுகிறேன்.

தோழியர்களே! நான் கீழே உட்கார்ந்திருந்த பொழுது இந்தப் பூவை (மல்லிகைச் செண்டைக் காட்டி) எடுத்தேன். என்னையறியாமலே எடுத்து முகர்ந்தேன். வயது எனக்கு எழுபத்தைந்து. கணவனில்லை. ஆனால், எனக்கு இன்னும் பூவின்மீது ஆசைவிடவில்லை! தோழியர்களே, என்னைப் பாருங்கள், பதினாறு வயது பெண்ணின் கணவன் இறந்தால், பூவைத்துக்கொள்ளக் கூடாது என்று கூறுகிறீர்களே, அவள் உள்ளம் என்ன பாடுபடும் என்பதை இந்தக்கொடுமையை வளர்த்தவர்கள் நாம்தான். மதத்தை பரப்பியமாபாவிகள்தாம் தான். ஆகவே, நாம் மனம் வைத்தால் நாளையே மதம் ஒழியும். புராணங்கள் என்ற பெயரில் தாய்மார்களை எந்த அளவுக்கு இழிவு படுத்தியிருக்கிறார்கள் என்பதனை எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன்.

லக்ஷ்மி, எங்கே கற்புகெட்டு விடுவாளோ என்று எண்ணி, விஷ்ணு அவளைத் தன் துடைத்தொடைக்குள் வைத்திருக்கிறானும். ஆனால், அவள்? பிரமதையைக்கற்பழித்தான். பெண் உருவெடுத்து, அய்யனார் பெற்றாரே? பார்வதி, திருமணத்திலே பிரம்மன் அய்யர். பிரம்மன் பார்வதியின் காலைக் கண்டு 'அய்யோ எவ்வளவு அழகி! பரமசிவனுக்கு கிடைத்துவிட்டாளே நமக்குக் கிடைக்காமல்' என்று பொறாமைப்பட்டு, அவள் தொடையினைக்காண எண்ணினான். இசற்தள் விந்துவெளிப்பட, அதனை எடுத்து ஒரு செம்பில் விட்டானும்! அதுதான், இன்று நம் கல்யாணத்திலே வைக்கிறோமே, கலசம்! அதுதான் இந்தக் கதைகள் தேவைதானா? இதைக் கண்டிப்பதா குற்றம்? இன்னும் கேளுங்கள். 'சுந்தரமுள்ள ஒரு ஆணை, ஒரு பெண் விரும்பினால் அவன் தகப்பனாகவோ, பின்ளையாகவோ இருந்தாலும் இச்சிக்கலாம். அவனோடு கூடலாம்!' இது வடமொழிசுலோகம். இதை நீங்கள் வரவேற்கிறீர்களா? அண்ணை வம்வகத நீங்கள் இதை ஏற்கிறீர்களா? இதை ஒரு தெய்வப்பெண் கூறுகிறாள். என்ன அயோக்யத்தனம். புருஷனே உலகில் இல்லாமல் போனால் தான் கற்பு காண முடியும்; புருஷர்கள் உள்ள வரையில் விபசாரிகள் இருக்கத்தான் செய்வர். இதுவும் ஒரு வடமொழி சுலோகம்! எவ்வளவு கேவலம்? அய்யரை நீக்கி, புரோகிதத்தை ஒழித்து நீங்கள் திருமணங்களை நடத்தவேண்டும். ஏனென்றால், அவன் சொல்லுகிற ஸ்லோகப்படி முதலில் கலியாணப் பெண், இந்திரனுக்கு. இரண்டாவது, கந்தர்வன்—அக்னி நான்காவது கலியாண செய்துவைக்கிற பார்ப்பானுக்கு—ஐந்தாவதுதான் புருஷனுக்கு மனைவியாகிறாள்? எவ்வளவு கேவலம்? கணவன் அடிக்கப் போகும்போது ஏனக்கு மற்றும் நான்கு புருஷன் உண்டென்றால் சும்மா இருப்பானா? இந்த முறையில் திருமணம் தேவையா? இன்னும் கல்யாணங்களிலே அம்மி மிதித்தியே, அருந்ததிய கண்டியா' என்று மணமகன், மணமகளைக் கேட்கிறான். என்ன அர்த்தம்? கற்பு கெட்டாள் அகல்யா. ஆகவே கல்லானாள். அதுபோல் ஆகாமல், அருந்ததியாக இரு என்று பொருள். இது எப்போது சொல்லவேண்டுமாம்? கல்யாணமாகி, மனைவி தவறினால் அப்போதல்லவா சொல்லவேண்டும்? ஆகவே இந்த புரோகிதமுறை ஒழியவேண்டும் என்கிறோம். இப்படிக் கடவுள்களைப்பற்றிக் கேவலமாக எழுதி வைத்தது புராணங்களே தவிர, தி. மு. கழகத்தாரல்ல.

விதவைகளுக்குத் திருமணம் கூடாது. பாவம் என்று நீங்கள் எண்ணக்கூடாது. அது 'விதி'க்கவுண்டானது என்றால், ஆதி சங்கராச்சாரியார் எப்படி ஒரு விதவைக்குப் பிறந்தார்? அதுவும் உலக ஞானியாக அல்லவா மாறினார்? தயுமானவரும் அப்படித்தானே? இவரும் விதவைக்குப் பிறந்தவன்தான். ஆகவே, தாய்மார்களும், தோழர்களும் விதவை மணத்தைப் போக்கவேண்டும். மற்றும் நீங்கள் நாட்டியக்கலையை ஒழித்துக் கட்டவேண்டும். காரணம், அதுதான் விபசாரத்தை வளர்க்கிறது உதாரணமாக ஒன்று கூறுகிறேன். இருஷ்ணன், தன் ணிகொண்டு செல்லும் ஒரு பெண்ணின், மின்னலே இழுக்க, அவன் கேட்கிறான். ஏ! கிருஷ்ணா என் என்னை இழுத்தாய் என்று உன் செங்கைகள் என்னை இழுத்தன. ஆகவே—இழுத்தேன்' என்று கடவுள் சொல்லுகிறான். அதற்குப் பெண் சொல்லுகிறாள், எது உன்னை இழுக்கவோ அதை இழுக்காமல்...பின்னலை ஏன் இழுத்தாய்' என்று இதுநாட்டியமதேவையா இந்த ஆபாசமான நாட்டியம்? தமிழச்சியே, உனக்கு இது தேவையா? ஆகவே, தாய்மார்களே! நீங்கள் இம்மாதிரிப் புராணக்குப்பைகளை விட்டொழித்து நான் தமிழச்சி, என் நாடு திராவிடம் என்று சொல்லுவேன்; தாலாட்டும் தமிழை பாடுவேன். அப்படி நீதி திருமணம் செய்வேன், வீரத்தை கூறுவேன் என்று நீங்கள் உறுதிகொள்ளுங்கள். உறுதி கொண்டதற்கடையாளமாக தாய்மார்கள் மட்டும் கைதட்டுங்கள்.

(பலத்த கைதட்டல்)

சி. பி. சிற்றரசு

தாய்மார்கள் இங்கு மாநாட்டுக் கொட்டகையில் பாதி அளவு, எந்த மாநாட்டிலும் இதுவரையில் கூடாத அளவு பெருந்திரளாக கூடியிருப்பது எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. நம் கழகக் கூட்டங்களுக்கும், பேசசுக்களுக்கும் இன்றைய அரசாங்கம் தடைவிதிக்கிறது ஆனால், அதே நேரத்தில் பேச்சுரிமை, எழுத்துரிமை உண்டு என்று ஜனநாயகப் பிரகடனத்தைக் காட்டுகிறது. காமராஜர் கூறினர், இந்த ஆட்சியை அண்ணாத்துரை மூன்று நாள் ஆளமுடியுமா என்று. நிச்சயமாக எங்களால் ஒரு நிமிஷம் கூட ஆளமுடியாது. காரணம், இதைப்போன்ற ஊழலாட்சி வேறெங்கும் இல்லை. ஊழல் என்று நான் மட்டும் கூறவில்லை. தோயம்புத்தூரிலே பேசிய சி. பி. சுப்பையா, 'ஓட்டைப் பார்த்து எங்களுக்கு கட்டாயம் ஓட்டு போடுங்கள் என்று கேட்கவில்லை. 'எங்கள் பெட்டியிலே தான் போடுவாங்க'' என்றார் என்ன அர்த்தம் இதற்கு? 'இராட்டைக் கைத்தொழில் வளர்ச்சியில் காங்கிரஸ்காரர்கள் செய்து காண்பித்ததென்ன? கள்ளச் சாரயம் காய்ச்சியதல்லாமல் வேறு என்ன? கல்வி தெரியாதவர் கல்வி மந்திரி, சட்டம் தெரியாதவர் சட்ட மந்திரி இன்று இல்லையானால், மலையாள மேனனை தமிழுக்கு அமைச்சராக தேர்ந்தெடுப்பார்களா? கல்விதான் இப்படியென்றால், சட்டமாவது சரியாக இருக்கிறதா? 100 ரூபாய் கொடுத்தால் பிராந்தி, 1 ரூபாய் கொடுத்தால் கள்ளு. கொஞ்சம் துணிவு இருந்தால் கஞ்சா! ஆகவே, இந்த ஊழல் அரசாங்கம் மாற்றப்படவேண்டும். அதற்கு அடிகோலவே இந்த மாநாடு.

இரா. நெடுஞ்செழியன்

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இரண்டுமணி நேரம் ஆற்றிய அரிய ஆராய்ச்சியுரையின் போது குறிப்பிட்டதாவது:—நாகரிகத்தின் கூட்டுவலின் நோக்கம் கருத்தை எடுத்துக் கூறவும், தம்மைபற்றி வெளியுலகம் என்ன நினைக்கிறது என்பதை அறியவுந்தானே. நாகரிகத்தின் நோக்கம் அரசியல் பொருளியல், சமுதாயம் ஆகிய துறைகளில் சரிநீதி பெறுவதே. ஏன் மூன்று துறைகளிலும் நாம் இறங்கி பாடுபடுகிறோம் என்றால், அரசியல் பொருளாதாரம், சமுதாயம் ஆகியவை மனித வாழ்வில், மேஷடியில் குறுக்கு இழை, நெடுக்கு இழைபோல பின்னப்பட்டுள்ளது. பலதடவை கூறியிருக்கிறோம். நாம் பலாத்காரத்தைக் கையாள்பவர்கள் அல்ல என்று. சிந்தியுங்கள் என்கிறோம். சிந்திக்கத் தெரியாதவன் முட்டாள். தெரிந்தும் சிந்திக்காதவன் சோம்பல் அடித்தப் பிண்டம். சிந்தித்து நம் கருத்தை உணர்ந்து வெளியிட மறுப்பவன் வஞ்சகன், பேடி; வெளியிடுபவன் அறிவாளி. சமஸ்கிருதம் என்றால் மாற்றி செய்யப்பட்டது என்று பொருள். ஆகவே, இருந்தவைகளுக்குள் ஒருமொழி இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. அதுதான் நம் தாய்மொழி தமிழ்மொழி. தமிழ் மொழியிலே ஓடெடுப்பது போன்ற குடைவெடுத்தல், நாழிகைக்கணக்கிடல் போன்ற அறிவியல்கள் நிறைந்துள்ளது. ஆனால், தமிழன் எப்போதும் கைப்பிள்ளையாக இருக்கிறான். போரிலே, கூறியவர்களுக்கு சேரிய மார்பைக்காட்டியவன் தமிழன்— ஆனால், இன்று அவன், பல்லிக்கும் ராமகாலத்திற்கும் அஞ்சுகிறான்! இதைப்போன்ற கோழைத்தனம் வேறு எந்த நாட்டிலும் காணமுடியாது. இந்த மடமை ஒழிய வேண்டுமென்றால் தடை? ஆகவே, [illegible] பிரிந்தால்தான் நாம் [illegible] முடியும் அதற்கு நீங்கள் [illegible] செய்ய வேண்டும். ஒலிபெருக்கியாக நீங்கள் மாறி, நம் கொள்[illegible] பினைப் பரப்ப வேண்டும்.

இரவு 10-மணிக்கு, செ[illegible] முன்னேற்ற நாடகக் [illegible] நாரால் 'வழக்கு வ[illegible] சமத்த கசடா, ஆகிய நா[illegible] கள் நடைபெற்றன. வ. [illegible] மா. தி. மு. க. மாநாட்டுமே[illegible] நாள் நிகழ்ச்சி இரவு 1 மணிக்கு தலைவர் தோழர் அன்பழகன் நன்றி கூறுதலினுடன் முடிவுற்றது.

ரேஷனில் கொடுக்கும் உணவுப் பொருள் வகைகள்

சர்க்காரின் உத்திரவு

ஜூலை 2-ந் தேதி முதல் ரேஷன் கார்டு வைத்திருப்பவர்களுக்குக் கொடுக்கவேண்டிய உணவு தானியங்கள், அவற்றின் அளவு ஆகியவை பற்றி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி, ஒவ்வொரு பெருக்கும் பின்வருமாறு ரேஷன் கொடுக்கப்படும்.

அரிசி சாப்பிடுபவர்கள்:—7 அவுன்ஸ் அரிசி, கோதுமை, கம்பு அல்லது செமோலினு அல்லது மைதா: 2 அவுன்ஸ் செமோலினு: 3 அவுன்ஸ் கோதுமை, செமோலினு அல்லது கம்பு.

கலப்பு உணவு உட்கொள்பவர்கள்:—4 அவுன்ஸ் அரிசி கோதுமை கம்பு அல்லது செமோலினு: 2 அவுன்ஸ் செமோலினு: 6 அவுன்ஸ் கோதுமை, செமோலினு அல்லது கம்பு.

கம்பு சாப்பிடுபவர்கள்:—2 அவுன்ஸ் அரிசி கோதுமை கம்பு, அல்லது செமோலினு; 2 அவுன்ஸ் செமோலினு; 3 அவுன்ஸ் கோதுமை, செமோலினு, அல்லது கம்பு.

ஒருநபருக்கு ஒரு நாளைக்கு 12 அவுன்ஸுக்குமேல் உணவு தானியங்கள் கொடுக்கக் கூடாது என்றும், ரேஷன் ரொட்டியாக இருந்தால் 12 அவுன்ஸ் ரொட்டியும் 2 அவுன்ஸ் செமோலினுவும் கொடுக்கவேண்டும் என்றும் உத்தரவு கூறுகிறது.

எந்த ஒரு உணவு தானியத்தையும் வாங்கியாகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்காது.

ஹோட்டல்களில் ஒருவேளை உணவில் 3 அவுன்ஸ் அரிசியும் ஒரு அவுன்ஸ் செமோலினுவும் அரை அவுன்ஸ் கோதுமையும் இருக்கவேண்டும். செமோலினு கட்டாயம் இருந்தாக வேண்டும்.

கம்யூனிஸ்டுகள் மீதுள்ள தடை

உடனே வாபஸ் வாங்க ரஷ்யா கோரிக்கை

லண்டன், ஜூலை 25— ஜப்பானிய கம்யூனிஸ்ட் தலைவர்கள் 41 பேர் மீது ஜெனரல் மக்-ஆர்தர் விதித்த தடை உத்தரவை உடனே வாபஸாக வேண்டும் என ரஷியா கேட்டிருக்கிறது இத்தடை உத்தரவுகள் 'பாட்ஸ்டாம் ஒப்பந்தத்திற்கு விரோதமானவை'' என்று ரஷ்யா கூறுகிறது.

ஜப்பானுக்கான நேசநேசக் கவுன்ஸிலில் உள்ள சோவியத் மெம்பர் ஜெனரல் பாவியா ஷென்கோ இந்த ரஷ்ய கோரிக்கையை மக்-ஆர்தரிடம் நேற்று சேர்ப்பித்தார்.

சுதந்திர தினத்தன்று இராணுவ அணிவகுப்பு இராதாம்

(0)

இந்திய சர்க்கார் முடிவு

(—)

மாகாண சர்க்கார்களுக்கு சுற்றறிக்கை

சென்னை, ஜூன் 26—

சுதந்திர தினத்தன்று (ஆகஸ்ட் 15-ந் தேதி) ராணுவ அணிவகுப்பை புதுடில்லியில் நடத்துவதில்லை என்று முடிவு செய்திருக்கின்றனர்.

இதர மாகாண சர்க்கார்கள் விரும்பினால் ஸ்தல பிரதேச கமாண்டர் 'ஸப் ஏரியா' கமாண்டர் இவர்களைக் கலந்து ராணுவ அணிவகுப்பை வைத்துக்கொள்ளமுடிந்தால் வைத்துக்கொள்ளலாம் என்று அறிவித்திருப்பதாகத் தெரிகிறது.

இத் தினத்தை எப்படி கொண்டாடவேண்டுமென்பதுபற்றி தாங்கள் செய்துள்ள முடிவை பற்றிய சுற்றறிக்கையை இந்திய சர்க்கார் எல்லா மாகாண சர்க்கார்களுக்கும் அனுப்பியிருக்கின்றனர்.

அதில் கூறப்பட்டிருப்பதாவது:—ஆகஸ்ட் 15-ந் தேதி விடுமுறைதினமாகும். இந்திய ஜனாதிபதி அயல்நாட்டு தூதுவர்களுக்கும், இதர விருந்தினர்களுக்கும் விருந்து அளிப்பார். செங்கோட்டையில் கொடியேற்று விழா நடைபெறும் அப்போது ராணுவத்தினர் அணிவகுத்து மரியாதை செலுத்துவர்.

சென்னை சர்க்காருக்கு கிடைத்துள்ள இச்சுற்றறிக்கையின் பிரதிகளை சர்க்காரின் பிரதம காரியதரிசி, போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், போலீஸ் கமிஷனர் ஜில்லா கலெக்டர்கள் முதலியவர்களுக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

இராக்கில் சத்துள்ள உணவு இல்லை

பாக்தாத், ஜூன் 2[illegible]—

இராக் ஜனத்தொகையில் 70 சதவிகிதம் பேர் உணவுப் பொருள் விலை மலிவில்லாததால் சத்து இல்லாததால், பலவித நோய்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள் எனத் தெரிகிறது. ஆகவே, இராக் சர்க்கார் விசேஷ உணவு இலாகா ஒன்றை ஏற்படுத்தி, உணவு விஷயமாகவனம் செலுத்த உத்தேசித்திருக்கிறது.

கள்ளக்கையெழுத்து கண்டுபிடிக்கும் பயிற்சி

லண்டன், ஜூன், 25—

பிரபல இந்திய கிரிக்கெட் ஆட்டக்காரர் தோமஸ் மாவாடே முதல் தடவையாக இங்கு விஜயம் செய்திருக்கிறார். இவர் இங்கு 6 மாத காலம் தங்கி கள்ள கையெழுத்து கண்டுபிடிக்கும் வேலையில் பயிற்சி பெறுகிறார். —ஏஜோப்

நிரபராதிக்குத் தண்டனை

நியூயார்க், ஜூன். 26—

15 வருஷகாலம் வழக்கு நீடித்ததின் தண்டனை பெற்று 34 மாதகாலம் சிறைவாசம் செய்த [illegible] [illegible] நிரபராதி [illegible] இப்போது தெரியவந்து [illegible] செய்யப்பட்டிருக்கிறார். [illegible] கையெழுத்திட்டு 'செக்' [illegible] இவர் மீது குற்றம் [illegible]. ஆனால் உண்மை [illegible] செய்தவர் [illegible] [illegible] [illegible] [illegible] அவர் [illegible] [illegible] [illegible] கொண்டார். —ஏஜோப்

அரண்மனைகளில் அபாய அறிவிப்பு 'அலாரம்'

லண்டன், ஜூன். 26—

பிரிட்டிஷ் மன்னரின் தாயார் மேரிராணியின் அரண்மனையில் கொள்ளை நடந்ததைத் தொடர்ந்து எல்லா அரண்மனைகளுக்குமே திருடர்கள் வந்தால் அறிவிக்கும் எலெக்ட்ரானிக் பிரண சாதனம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த 'அலாரம் ஸ்காட்லாந்து யார்ட்' அதிகாரிகளுக்கு கேட்கும்படி செய்யப்படுமாம். இந்த 'அலாரம்' பக்கிங்ஹாம் அரண்மனை, மார்ல்பரோ ஹவுஸ் மேரிராணி அரண்மனை ஆகிய இடங்களில் முதலில் அமைக்கப்படுமாம். —ஏஜோப்

அபூர்வ ஆபரேஷன்

சிகாகோ, ஜூன் 26—

உலகிலேயே மிக அபூர்வமான ஆபரேஷனை அமெரிக்க சர்ஜன்கள் செய்து முடித்திருக்கின்றனர். ஒரு பெண்ணின் கோளாறுபட்ட மூத்திரக்காயை அகற்றிவிட்டு இறந்துபோன மற்றொரு பெண்ணின் இதே பாகத்தை பொருத்தி இந்த ஆபரேஷன் செய்யப்பட்டிருக்கிறது.

அன்று தூதுவர் இன்று "போர்ட்டர்"

லண்டன், ஜூன் 26—

லண்டன் கிங்ஸ்கிராஸ் ரயில்வே டர்மினலில் இப்பொழுது போர்ட்டராக வேலை செய்யும் ஒரு போலந்துக்காரர் யுத்தத்திற்கு முன்பு தூதுவர் பதவியை வகித்தவர் என்பது தெரியவருகிறது.

இவர் பெயர் லெப்ஜெவிச் ரோமாஸெஜெவிக் என்பதாம். இவருடன் வேலை செய்யும் இதர போர்ட்டர்கள் இவரை 'ஜே' என்றழைக்கிறார்கள்.

இவர் யுத்தத்திற்குமுன் பெர்லின், ஜினிவா, புகாரெஸ்ட் முதலிய இடங்களில் தூதுவர் பதவியை வகித்திருக்கிறார். யுத்தத்திற்குப்பின் அவர் ஆர்ஜெண்டைனாவுக்கு சென்றுவிட்டார். போலந்து கம்யூனிஸ்டுகள் வசமாகிவிட்டதால் அவர் இங்கிலாந்திற்கு வந்துவிட்டார்.

இவருக்கு 5 பாஷைகள் நன்றாகத் தெரியுமாம். போர்ட்டர்களிடையே இவர் மிகவும் செல்வாக்கு பெற்று மரியாதையுடன் நடத்தப்படுகிறார்.

தெ. ஆ. மாவட்ட தி. மு. க. முதல் மாநாடு

வரவேற்புக் குழுவினர்க்குஅறிவிப்பு

கடந்த 12—3—50-ல் நடைபெற்ற மாநாட்டின் வரவு, செலவு கணக்கு பரிசிலனை செய்ய நாளது 2—7—50 ஞாயிறு மாலை 5-மணிக்கு குறிஞ்சிப்பாடி தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும். வரவேற்புக் குழுக் கூட்டத்திற்கு வரவேற்புக் குழு அங்கத்தினர்கள் தவறாது வந்து கலந்துகொள்ளுமாறு தோழர் இரா. சாம்பசிவம் அறிவிக்கிறார்.

[illegible] இரவு உணவு வசதியும் [illegible]ப்பட்டிருக்கிறது.

அணுக்குண்டு வெடித்ததின் விளைவு

வாஷிங்டன், ஜூன் 25

1945—ல் ஹிரோஷிமா நாகசாகி ஆகிய ஜப்பானிய நகரங்களில் அணுக்குண்டு வீசப்பட்டதன் காரணமாக அநேக ஜப்பானியர் குருடர்களாகி வருவதாக அணுசக்தி கமிட்டி கூறுகிறது.

'ரேடியோ ஆக்டிவ்' சக்தி காரணமாக மயிர் அநேகம் பேர்களுக்கு உதிர்ந்து விட்டது என்றும், தற்காலிகமான கபும்சகம் பலருக்கு ஏற்பட்டதென்றும் அக்கமிட்டி கூறுகிறது.

இந்த அணுகுண்டு வெடித்ததின் முழுப்பலனையறிய பல தலைமுறைகள் காத்திருந்து பார்த்தால்தான் முடியும் என்று இக்கமிட்டி அபிப்பிராயப்படுகிறது.

'ரேடியேஷன்' ஊைப்பார்த்ததால் 7 விஞ்ஞானிகள் கண்பார்வை இழந்தபின் இது விஷயமாக ஹிரோஷிமாவில் ஆராய்ச்சி செய்து பார்த்த பின்னரே அநேக ஜப்பானியர்களுக்கு அணுகுண்டு வெடித்த காரணமாக கண்பார்வைபோய் விட்டது என்கிற விஷயம் தெரியவந்தது. இம்மாதிரி நாகாசாகியிலுள்ளவர்களில் எவ்வளவு பேர்களுக்கு கண் பார்வை போயிருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்படும்.

சிங்கப்பூரில்புது அரசியல் கட்சி

சிங்கப்பூர், ஜூன் 25—

சிங்கப்பூர் ரீஜனல் இந்திய காங்கிரஸின் காரியதரிசி தோழர் ஜான் ஜாஹோப் சிங்கப்பூரில் புது அரசியல் கட்சியை ஆரம்பித்திருக்கிறார். இக்கட்சி சிங்கப்பூர் [illegible]தொழிலாளர் நலனுக்காக பாடுபடும் எனத் தெரிகிறது. —ஏஜோப்

ரேடியோ ஆக்டிவ் பொருள்கள்

லண்டன். ஜூன், 26—

அணுசக்தி குண்டுகள் செய்வதில் மீதமாகும் உபரிரேடியோ ஆக்டிவ் பொருள்கள் அநேக ஆயிர வருஷங்கள் அழிக்கமுடியாததாம். இவைகளை எங்கு வைத்தாலும் சமுத்திரத்திற்கு அடியில் கொண்டுபோய் வைத்தால்கூட உடைந்து ஆபத்து ஏற்படுமாம்.

இந்த ஆபத்தான உபரிரேடியோ ஆக்டிவ் பொருள்களை என்ன செய்வது என்பதை குறித்து ஹார்வெல்லில் விஞ்ஞானிகள் கூடி ஆலோசனை செய்தனர். இவைகளை ராக்கெட்டுகளில் வைத்து சந்திர மண்டலத்தை நோக்கி பிரயோகித்துவிடலாம் என்ற யோசனை குறித்து தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

துறைமுகப் பகுதிகளில் எலெக்டிக் டிரைகள்

புதுடில்லி, ஜூன் 26—

சென்னை, பம்பாய், கல்கத்தா துறைமுகப் பிரதேசங்களில் ஓரே சக்கரமுடைய மின்சார வண்டிகளை ஏற்படுத்தும் வேலையை இந்திய சர்க்கார் சீக்கிரமே எடுத்துக் கொள்ளும் எனத் தெரிகிறது.

இது விஷயமாக ஜி. ஐ. பி. ரயில்வேயைச் சேர்ந்த தோழர் வி. எல். வர்மா தலைமையில் ஏற்படுத்தப்பட்ட கமிட்டி இரண்டு வருடம் ஆராய்ந்து கான்ட்ராக்ட்[illegible] டீஸல் எண்ணெய் முதலிய[illegible] [illegible] இந்தியாவில் போதிய அளவு[illegible] கிடைக்காததால் மின்சார[illegible] வண்டிகளை ஓட்டவே சிபாரிசு[illegible] என்று முடிவு செய்தது.

தி. மு. கழகச் சொற்பொழிவு

28 - 6 - 50

காங்கயம் :—சி. பி. சிற்றரசு, கா. வெ. முத்தையா

உயரத்திலிருந்து விழுந்த குழந்தை

உயிர்தப்பிய விந்தை

லண்டன், ஜூன் 26—

ஹல் என்ற இடத்தில் மேல்மாடியில் வசிக்கும் மிஸஸ் ஹெலன் ஹால் ஜன்னல் திறந்து கீழே பார்க்கையில் பக்கத்து அறையில் விட்டிருந்த தன் இருபது மாதக் குழந்தை ஒரு தெருவிளக்குக் கம்பியின் கையில் இருப்பதைப் பார்த்து[illegible]. அப்போதுதான் தன் குழந்தை 50 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்திருக்கவேண்டும் என்று அவளுக்கு தெரிந்தது. நல்லவேளையாக குழந்தைக்கு காயம் எதுவும் இல்லை.

(குளோப்)

பாலஸ்தீனப் பிரிவினை

இந்திய தூதுவர் அசாப் அலி கருத்து

டமாஸ்கஸ், ஜூன் 26—

"பாலஸ்தீனத்தை பிளப்பதை ஆதிமுதற்கொண்டே இந்தியா எதிர்த்துவந்திருக்கிறது. அரபு பிரச்னைகள் தீர பெடரல் முறையே சிறந்ததென்று இந்தியா கருதியது. ஆனால் இந்த யோசனையை அரபுகள் காலம் தாழ்த்தே ஏற்க முன்வந்தனர். ஆனால் பலன் ஏற்படவில்லை" என்று ஸிரியாவிலுள்ள இந்திய தூதுவர் தோழர் அஸப் அலி அஸ்காரடை ஸி குளோப் நிருபருக்களித்த பேட்டியில் கூறினர்.

இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கையைப்பற்றி அவர் குறிப்பிட்டதாவது:— "இந்தியா எல்லோருக்கும் நண்பன். உலகத்தை பிளக்க முயலும் எந்த கோஷ்டியுடன் இந்தியா சேராது, இந்தியா ஆசியாவில் தன் கோஷ்டி எதையும் ஏற்படுத்தவும் உத்தேசிக்கவில்லை.

ஆனால் ஆசியநாடுகளை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்து ஐக்கியப்படுத்தினால் தான் மூன்றாவது உலக யுத்தம் ஏற்பட்டாலும் நம்மை பாதிக்காமல் செய்துக்கொள்ள முடியும்.

யு. எஸ். விமான விபத்தில் 58 பேர் பலி

நியூயார்க், ஜூன் 26—

விஸ்கான்ஸின் என்ற நாட்டில் புகலிக் மிச்சி கோரங்கிய புனை டெட்ஸ்டேட்ஸ் விமானத்தில் 58 பேர்கள் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று இப்போது தெரியவருகிறது. மிசிகன் ஏரிமீது இந்த விபத்து ஏற்பட்டிருக்கவேண்டும் எனக் கூறப்படுகிறது.

வர்த்தகத்துக்கு செஞ்சீன ஆதரவு

ஹாங்காங், ஜூன் 26—

வியாபாரம் செழிக்காமல் பொருளாதார நிலை உயரமுடியாதென்பதை செஞ்சீன தலைவர்கள் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் வியாபாரிகளுக்கு நிலைமைகளில் [illegible] ஆதரவுகள் அளிக்கமுன்வந்திருக்கின்றனர்.

டமாஸ்கஸ்ஸில் இந்தோனேஷிய மாணவர்கள்

டமாஸ்கஸ், ஜூன் 26—

கெய்ரோ அல்அஸார் சர்வகலாசாலையில் படிக்கும் இந்தோனேஷிய மாணவர்கோஷ்டி ஸிரியாவிலுள்ள சரித்திர முக்கியத்துவமுள்ள இடங்களை பார்வையிட இங்கு வந்திருக்கின்றனர்.

சோளத்தில் பலரகம்

வினி. ஜூன் 26—

ஆஸ்திரேலியாவில் சோளத்தில் பல ரகங்கள் உற்பத்தி செய்ய முடியும் என்பது நிரூபித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

எண்ணெய் ஊற்று கண்டுபிடிப்பு

கராச்சி, ஜூன் 25—

அஸ்ஸாமிலுள்ள பதாரியா காடுகளில் எண்ணெய் ஊற்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இக்காடுகள் பாகே எல்லை கோர்ட்டின் சமீபத்தில் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டதாக இருந்திருக்கும்.

அப்பிரதேசத்தில் மேலும் பல விடங்களில் தோண்டிப்பார்க்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமே எனத் தெரிகிறது.

மேட்டூர் நீர்த்தேக்கம்

நீர்மட்டம் உயர்ந்திருக்கிறது

மேட்டூர் நீர்த்தேக்கத்தில் சென்ற சில தினங்களில் நீர்மட்டம் 21 அடியிலிருந்து 27-அடிக்கு உயர்ந்திருக்கிறது.

இனியும் சில வாரங்களில் அதிக மழை பெய்யும் என்றும் எனவே, ஜூலை 5-ந் தேதிக்கு முன்பே, காவேரி நதி வாய்க்கால்களுக்குத் தண்ணீர் விடுவது சாத்தியமாக இருக்கும் என்றும் மராமத்து இலாகா அதிகாரிகள் கருதுகின்றனர்.

சாதாரணமாக, ஒரு வருஷத்தில் ஜூன் முதல் வாரத்திலேயே வாய்க்கால்களுக்குத் தண்ணீர் விடப்படும். இந்த வருஷம் தண்ணீர் குறைவாக இருந்ததால். இது ஜூலை 1-வரை ஒத்திவைக்கப்பட்டது.

ஏஜெண்டு தோழர்களுக்கு அறிவிப்பு

"மாலைமணி" ஏஜண்டு தோழர்கள் தாம் அனுப்பவேண்டிய பாக்கித் தொகை பூராவையும் இம்மாத முடிவற்குள் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் அப்படி அனுப்பத் தவறும் தோழர்கட்கு எவ்வித முன்னறிவிப்புமின்றி மேற்கொண்டு பத்திரிகை அனுப்பப்படுவது கண்டிப்பாக நிறுத்தப்படும் என்பதைத் திட்டமாகத் தெரிவிக்கிறோம்.

மானேஜர், "மாலைமணி"

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St. Madras-1.